**Dated : 25.11.2025** (நேரம் : நண்பகல் 12.30 மணி)

**MCOP. No: 72/2022**

**ம.சா. 1 திருமதி.முருகம்மாள்**

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை –**

விபத்து சமயம் நான் TN 63 N 1800 என்ற பதிவெண் கொண்ட அரசுப்பேருந்தில் பயணம் செய்தேன். விபத்தானது சின்ன இதம்பாடல் கண்மாய் அருகில் தேசிய நெடுஞ்சாலையில் வைத்து நடந்தது. விபத்து சமயம் நானும், என் கணவரும் பேருந்தில் பயணம் செய்தோம். நாங்கள் பயணம் செய்த அரசு பேருந்தை ஓட்டிய ஓட்டுநர் அதனை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் தான் ஓட்டி சென்றார். அவர் தான் எதிரே வந்த பொலிரோ வாகனத்தின் மீது மோதிவிட்டார் என்றால் விபத்து எப்படி நடந்தது என்று எனக்கு தெரியாது. என்னுடைய வருமானம் காட்டுவதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. பல்வேறு இணங்களில் நான் கேட்டுள்ள இழப்பீடு தொகை அதிகப்படியானது என்றால் சரியல்ல. எனக்கு பூரணமாக குணமடைந்துவிட்டதால் எதிர்கால மருத்துவச்செலவு எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. விபத்து பற்றி நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. திருத்தப்பட்ட மோட்டார் வாகன சட்டத்தின்படி நான் மனுவை காலதாமதமாக தாக்கல் செய்துள்ளதால் மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. விபத்திற்கு 3ம் எதிர்மனுதாரர் பேருந்து ஓட்டுநர் தான் காரணம் என்றும், அதனால் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் எனக்கு எவ்வித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரர் அரசு நிறுவனம் என்பதால் 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் மீது பொய்யாக புகார் கொடுத்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்தானது 3ம் எதிர்மனுதாரர் பேருந்து ஓட்டுநரின் கவனக்குறைவால்

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2025.11.25 17:40:27 +0530

ஏற்பட்டுள்ளது என்றும், எனவே 3ம் எதிர்மனுதாரர் நிறுவனம் தான் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. மேலும் 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டிச்சென்று விபத்து ஏற்பட்டுள்ளதால் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டதல்ல என்றால் சரியல்ல. மேலும் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு அனுமதி மற்றும் தகுதிச்சான்று முறையாக இல்லாததால் 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனம் எனக்கு எவ்வித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டதல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

சாட்சி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்து காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2025.11.25 17:40:33 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
இராமநாதபுரம்.